# கார்களின் காட்சி அறை

நதியின் நீரில் படுக்க வைத்து
குளிப்பாட்டப்பட்ட கொம்பன் யானைபோல்
வெளிச்சத்தில் நனைந்து கம்பீரமாய் நின்றது
கார்களின் காட்சி அறையில் புத்தம் புதிய கார்.
மாட்டுத் தொழுவத்தில் பிறந்த குழந்தை ஏசுவை
மூன்று ராஜாக்கள் தேடிச் சென்று பார்த்து வியந்ததுபோல்
பணக்காரர்கள் தேடிவந்து பார்க்கிறார்கள் அதனை.
மணப்பெண்ணைச் சிங்காரிப்பது போல் சிங்காரித்து
மெழுகு திரவம் பூசப்பட்டு பளபளக்கும் அந்தக் காரின்
வயிற்றின் உள்ளே ஆறு பேர் அமரலாம் என்று
நுனிநாக்கு ஆங்கிலத்தில் சொல்கிறார் விற்பனையாளர்.
கனவில் கண்ட காதலியை நேரில் கண்டதுபோல் மகிழும்
கார் காதலர்களுக்குப் புரிவதில்லை
ஒருவனின் மரியாதை ஓட்டும் காரில் இல்லாமல்
காரை நீ எப்படி ஓட்டுகிறாய் என்பதில் இருக்கிறது என்பது.

23 அக்டோபர் 2020

